**ஊடக அறிக்கை**

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

**ශ්‍රී ලංකා මහ බැංකුව**
**இலங்கை மத்திய வங்கி**
**CENTRAL BANK OF SRI LANKA**

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2023.12.29 |

# கட்டடவாக்கத் தொழிற்துறைக்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் - நவெம்பர் 2023

**கட்டடவாக்க கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2023 நவெம்பரில் 44.3 கொண்ட மொத்த நடவடிக்கைச் சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் கட்டடவாக்க நடவடிக்கைகளில் சுருக்கமொன்றை எடுத்துக்காட்டியது.** புதிய கருத்திட்டங்களின் குறைந்த மட்டமும் செயற்பாட்டிலுள்ள கருத்திட்டங்களுடன் தொடர்பான வேலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அவை இறுதிக்கட்டங்களில் இருப்பதால் நடவடிக்கை மட்டங்களைத் தடைப்படுத்தியுள்ளன எனப் பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில், புதிய கட்டளைகள் நவெம்பரில் உயர்வான வேகத்தில் வீழ்ச்சியடைந்தன. எனினும், அடுத்த ஆண்டின் முதலரைப்பகுதியில், குறிப்பாக அரசாங்க நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களை வழங்குவதில் பல பதிலிறுப்பாளர்கள் உயர்வடைதலொன்றை எதிர்பார்க்கின்றனர். தற்போதைய தொழிற்துறை சூழ்நிலையின் கீழ் குறைந்தபட்ச அலுவலர்களுடன் கம்பனிகள் இயங்குவதனால் தொழில்நிலை தொடர்ந்தும் சுருக்கமடைந்து காணப்பட்டது. மேலும், கட்டடவாக்க வேலையில் குறைவடைதலுக்கிணங்க கொள்வனவுகளின் அளவு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, வழங்குநர் விநியோக நேரம் மாதகாலப்பகுதியில் நீட்சியடைந்து காணப்பட்டது.


| மாறி | ஒத் | நவெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **மொத்த நடவடிக்கை** | **50.0** | **44.3** | - | **வீழ்ச்சியிலிருந்து நடுநிலை** |
| புதிய கட்டளைகள் | 48.6 | 45.7 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 36.1 | 35.7 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 44.4 | 42.9 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 51.4 | 51.4 | = | நீட்சியடைகின்றது, ஒத்த வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பிரதானமாக, சாதகமான வானிலை நிலைமைகளுடன் இணைந்து, அடுத்த ஆண்டிலிருந்து அதிகரிக்கப்பட்ட கேள்வியின் எதிர்பார்ப்புகளில் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழிற்துறையின் எதிர்கால எதிர்பார்க்கையானது சாதகமாகக் காணப்படுகின்றது. எனினும், அறிவிக்கப்பட்ட வரித்திருத்தங்கள் காரணமாக பொருட்களின் விலைகளில் மேல்நோக்கிய போக்கு பற்றி நிறுவனங்கள் கவலைகொண்டுள்ளன.

**மொத்த நடவடிக்கைச் சுட்டெண் அளவு**
**2023 நவெம்பர்**
**44.3**

கட்டடவாக்க கொ.மு.சு மொத்த நடவடிக்கைச் சுட்டெண்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *தொகுத்தல்: கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்*[1]

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்கும்.
கொ.மு.சு =50; துறையானது நடுநிலையில் காணப்படுகிறது
கொ.மு.சு >50; துறையானது பொதுவாக விரிவடைகிறது
கொ.மு.சு <50; துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது

### *மாறிகள் பற்றிய வரைவிலக்கணங்கள்:*

**மொத்த நடவடிக்கை:** கட்டடவாக்க நடவடிக்கையின் மொத்த அளவு, பன்னாட்டு நடத்தையினைப் பின்பற்றி 'கட்டடவாக்க கொ.மு.சு' ஆக குறிப்பீடு செய்யப்படும் முதன்மைச் சுட்டெண் இதுவாகும். இது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் தொழில்நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**தொழில்நிலை:** நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை
**கொள்வனவுகளின் அளவு**: உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள்
**நிரம்பலர் விநியோக நேரம்:** கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு ஏனைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.

### *அளவீட்டு பதிலிறுத்தல்கள்*

மாதத்திற்கு மாதம் அபிவிருத்திகளை எடுத்துக்காட்டுவதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுத்தல்களை உள்ளடக்கி கட்டடவாக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்ட உயர்தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்க கம்பனிகளை இலக்காகக் கொண்டு இவ்வளவீடு நடாத்தப்படுகின்றது.

[1] உலகளாவிய தொகுப்பாளராக இனங்காணப்பட்டு உலகளவில் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சுட்டெண்களை தொகுக்கின்ற எஸ்அன்ட் பி குளோபல் நிறுவனத்தால் பின்பற்றப்படும் முறையியல் பயன்படுத்தி கொ.மு.சு தொகுக்கப்படுகின்றது.